<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 20/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமணன் | நாள் | 12.02.2024 |
| தகப்பனார் பெயர் | தானப்பன் | | |

**<u>5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

20) என் வழக்குரையில் இறந்த 1ம் பிரதிவாதி லிங்கேஸ்வரன் எந்த அரசியல் கட்சியை சார்ந்தவர் என்றும், எந்த அரசியல் கட்சியின் செல்வாக்கின் அடிப்படையில் சொத்துக்களுக்கு தன் பெயரில் பட்டா வாங்க முயற்சித்தார் என்றும், குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்தது பின்னிட்டு அவர் இறந்துவிட்டார். 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி லிங்கேஸ்வரனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், சரிதான்.

21) 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்தில் தோரமங்கலம் கிராமத்தில் சில காலம் (கர்ணம்) கணக்கு பிள்ளை பதவியை உரிய அலுவலர் விடுப்பில் இருந்த காலத்தில், மாற்று பணியாக பார்த்துவந்தார் என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு பத்திர எழுத்தராக அங்கீகார உரிமம் வாங்கினார் என்றால், சரிதான். பின்னிட்டு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில், கயத்தாறு கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணி நியமன ஆணை பெற்று சிறிது காலம் பணியாற்றினார் என்றால், சரிதான். மேற்படி பதவியிலிருந்து பணி ஓய்வு பெற்ற பின்பு அவரது இறுதி காலம் வரை பத்திர எழுத்தராக தொழில் செய்து வந்தார் என்றால், சரிதான். எனவே நான் சொல்வது போல் அவர் எவ்வித அரசியல் கட்சியிலும் இருக்கவில்லை என்றாலும், அவருக்கு எவ்வித அரசியல் செல்வாக்கும் இல்லை என்றாலும், சரியல்ல.

22) மேற்படி 1ம் பிரதிவாதியின் பாட்டனார் ராமசாமி கவுண்டர் கடந்த 27.06.1979ம் தேதியில் தாவா சொத்தை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதிவைத்தாக அவரின் பதிலுரையில் சொல்லியுள்ளார் என்றால், சரியல்ல. அவ்வாறு ராமசாமி

கவுண்டர் எந்த உயிலையும் எழுதிவைக்கவில்லை. ராமசாமி கவுண்டரை அவரின் இறுதி காலம் வரை நாங்கள் தான் பராமரித்து வந்தோம். மேற்படி உயிலை 1ம் பிரதிவாதி மோசடியாக தயாரித்துக்கொண்டார். நான் சொல்வது போல் மேற்படி ராமசாமி கவுண்டரை இறுதி காரம் வரை பராமரித்து வந்ததற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை.

23) மேற்படி ராமசாமி கவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என என் வழக்குரையில் நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான். எந்த தேதியில் மேற்படி ராமசாமி கவுண்டர் இறந்தார் என எனக்கு தெரியுமா என்றால் தேதி சரியாக நினைவில்லை. கடந்த 07.02.1982ம் தேதியில் மேற்படி ராமசாமி கவுண்டர் இறந்தார் என்றாலும், அவரது இறுதி சடங்குகள் அனைத்தையும் 1ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும்தான் செய்தார்கள் என்றாலும், மேற்படி ராமசாமி கவுண்டரை நான் தான் இறுதிவரை பராமரித்தேன் என தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

24) நான் சொல்வது போல் எப்போது 1ம் பிரதிவாதி தன் பெயரில் பட்டா பெற முயற்சிக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியவந்தது என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 வாரத்திற்கு முன்பு தெரியவந்தது. யார் மூலமாக தெரியவந்தது என்றால், ஆவடத்தூர் கிராம நிர்வாக அலுவலர் எங்களை அழைத்து விசாரித்தபோதுதான் தெரியவந்தது. மேற்படி கிராம நிர்வாக அலுவலரின் பெயர் என்னவென்றால், எனக்கு தெரியாது.

25) மேற்படி கிராம நிர்வாக அலுவலர் என்ன விசாரித்தார் என்றால், ராமசாமி கவுண்டரின் வாரிசுகள் அனைவரையும் அழைத்து, 1ம் பிரதிவாதி ஒரு உயிலை தாக்கல் செய்து, அதற்கு தாசில்தார் அலுவலகத்திலிருந்து பட்டா மாறுதல் செய்ய அறிக்கை கோரியுள்ளதாகவும், அதனால் அது தொடர்பாக விசாரித்தார். அப்போது நாங்கள் மேற்படி சொத்து பாகமான சொத்து என்றும், 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா வழங்கக்கூடாது எனவும் கூறினோம். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் (பெண்

அலுவலர்) நீதிமன்றத்திற்கு சென்று முறையிடுமாறு எங்களிடம் கூறிவிட்டார்.

26) மேற்படி என் வழக்குரையில் போலியாக ஒரு உயில் ஆவணத்தை வைத்துக்கொண்டு 1ம் பிரதிவாதி தன் பெயரில் பட்டா மாறுதல் ஏற்படுத்த முயற்சித்தார் என நான் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். மேற்படி உயிலை நகல் ஏதேனும் பெற்று பரிசீலித்தேனா என்றால், பார்க்கவில்லை. தற்போது வரை மேற்படி உயிலின் நகலை நான் பார்க்கவில்லையா என்றால், பார்க்கவில்லை. உயில் உள்ளதை நான் தெரிந்து கொண்டேன் என்ற நிலையில், மேற்படி உயிலின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் பேரில் உரிமை கோரும் நிலையிலும், மேற்படி உயிலை செல்லாது என விளம்புகை செய்யக்கோரியோ, தாவா சொத்தின் பேரில் என் உரிமையை விளம்ப கோரியோ ஏதேனும் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால், இல்லை.

27) 1ம் பிரதிவாதியின் பெயரில் உயில் எழுதப்பட்டுள்ள விவரமும், மேற்படி உயிலின் அடிப்படையில் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிதான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்ற விவரமும், அவரது குடும்ப சூழ்நிலைகாரணமாக வெளியூர்களுக்கு சென்று வந்ததால் உடனடியாக பட்டா மாறுதால் செய்ய இயலவில்லை என்ற காரணமும் எனக்கு தெரியும் என்றாலும், 2015ம் வருடத்தில் 1ம் பிரதிவாதி பட்டா மாறுதல் செய்ய முயன்ற போது, மேற்படி சங்கதியை நான் தெரிந்து கொண்டு காலம் கடந்த 2018ல் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

28) மேற்படி ராமசாமி கவுண்டரின் சொத்துக்களை பாகம் பிரிக்க கோரி அ.வ.எண்.589/1996 என்ற வழக்கை என் தகப்பனார் தானப்பன் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினை வழக்கில் இந்த தாவா சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி பாகபிரிவினை வழக்கு இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு தற்போது மேல்முறையீட்டு வழக்கு சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றாலும், அதில் நான் தரப்பினர் என்றாலும் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் இந்த தாவா சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால், சரியாக

எனக்கு தெரியவில்லை.

29) மேற்படி மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்படுவதற்கு முன்பே என் தந்தை இறந்து விட்டார் என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு மேற்படி மேல்முறையீட்டு வழக்கை தொடர்ந்து நான் தான் நடத்தி வருகிறேன் என்றால், சரிதான். என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. என் தந்தை உயிருடன் இருந்தபோது 1ம் பிரதிவாதி தன் பெயரில் பட்டா மாற்ற நடவடிக்கை எடுத்தாரா என்றால், இல்லை. அவர் நடவடிக்கை எடுக்கும் போது என் தந்தை இறந்துவிட்டார்.

30) மேற்படி என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்ட பாகபிரிவினை வழக்கு எந்த தேதியில் இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரியாக நினைவில்லை. மேற்படி பாகபிரிவினை வழக்கில் தற்போது இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு காட்டப்பட்டிருந்தால், தற்போது இவ்வழக்கை நான் தாக்கல் செய்ய இயலாது என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் மேற்படி பாகபிரிவினை வழக்கு குறித்தோ, அதன் மீதான மேல்முறையீட்டு வழக்கு குறித்தோ சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. எதனால் சொல்லவில்லை என்றால், தாவா சொத்தை நாங்கள் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்ததால், மேற்படி பாகபிரிவினை வழக்கு குறித்து இவ்வழக்கில் சொல்லவில்லை.

31) தற்போது இவ்வழக்கில் தாவா சொத்தானது எனக்கு மட்டும் பாத்தியம் என சொல்லியுள்ளேனா அல்லது ராமசாமி கவுண்டரின் மற்ற வாரிசுகளுக்கும் பாத்தியம் என சொல்லியுள்ளேனா என்றால், ராமசாமி கவுண்டரின் அனைத்து வாரிசுகளுக்கும் பொதுவாக பாத்தியப்பட்டது எனதான் சொல்லியுள்ளேன். இவ்வழக்கில் ராமசாமி கவுண்டரின் மற்ற வாரிசுகள் யாரையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். 1ம் பிரதிவாதிதான் பட்டா வாங்க முயற்சித்ததால் அவர் மீது மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன்.

32) தாவா சொத்தில் எங்களுக்கும் பாகம் பிரிக்கவில்லை என்றும், எனக்கு குறிப்பாக இவ்வளவு பாகம் உள்ளது என்றும் கூறி எனது பாகத்தை பிரித்து கொடுக்க கோரி நான் இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால், சரிதான். சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் மேற்படி பாகபிரிவினை மேல்முறையீட்டு வழக்கில் எத்தனை பிரதிவாதிகளை சேர்த்துள்ளேன் என்றால், பங்காளிகள் நான்குபேரை சேர்த்துள்ளேன்.

33) ராமசாமி கவுண்டரின் மகன்களும், மகள்களும் தற்போது இறந்துவிட்டனர் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் முதல் மகன் பெயர் கோவிந்தன். கோவிந்தனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், 4 ஆண் வாரிசுகளும், 2 பெண் வாரிசுகளும் உள்ளனர். அவர்களில் ஒரு பெண் வாரிசும் ஒரு ஆண் வாரிசும் இறந்து விட்டனர். இறந்த நபர்களுக்கு குழந்தைகள் உள்ளனர்.

34) ராமசாமி கவுண்டரின் 2வது மகன் பெயர் தானப்பன். அவர் எனது தந்தை. என் தந்தைக்கு 5 மகன்கள் உள்ளனர். பெண் வாரிசுகள் இல்லை. மேற்படி 5 மகன்களில் நானும், என் சகோதரர் அண்ணாமலையும் உள்ளோம். மற்ற மூவரும் இறந்துவிட்டனர். இறந்துபோன மேற்படி 3 நபர்களுக்கும் வாரிசுகள் உள்ளனர்.

(5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மேட்டூர்.